முதலாந் தவணைப் பரீட்சை - 2017

1st Term Examination - 2017

MUSIC

நேரம்
Time

| | | | |
|---|---|---|---|
| தரம் Grade | 10 | பகுதி | I |

- பொருத்தமான விடையினைத் தெரிவுசெய்க

1) காதால் கேட்டு இன்பம் பெறும் கலை என சிறப்புப் பெயர் பெற்றது
1. நுண்கலை 2. சிற்பக்கலை 3. காந்தர்வவேதம் 4. சிரவணகலை

2). நெடில் ஸ்வரம் எனப்படுவது.
1. நீண்டஓசையுடையது 2. நீர்க்கஸ்வரம்
3. ஒருஅட்சரத்திற்குமேற்பட்டது 4. அனைத்தும் சரி

3. ஹிந்துஸ்தானி இசையில் பிலாவல் எனஅழைக்கப்படும் உருப்படிவகை
1. மாயாமாளவகௌளை 2. கல்யாணி 3. சங்கராபரணம் 4.தோடி

4. ஸ்வரபல்லவி என அழைக்கப்படும் உருப்படி வகை
1. கீதம் 2. ஜதீஸ்வரம் 3. வர்ணம் 4. ஸ்வரஜதி

5. "நவகோடி நாராயணன்" எனும் சிறப்புப் பெயரை உடையவர்
1. புரந்தரதாஸர் 2. முத்துத்தாண்டவர் 3. பாபநாசம்நசிவன் 4. தீட்சிதர்

6. மோகன இராகத்தின் ஆரோகண அவரோகணம்.
1. ஸரிமபதஸ் ஸ்தமரிஸ 2. ஸரிமபநிஸ் ஸ்நிபமரிஸ 3. ஸரிகபதஸ் ஸ்தபகரிஸ 4. ஸரிகபதஸ் ஸ்நிதபமகரிஸ

7. சிறுவர் பாடல்களுக்கு மெட்டமைக்க பொருத்தமான இராகம்
1. மோகனம் 2. ஆனந்தாபைரவி 3. சங்கராபரணம் 4. மூன்றும் சரி

8.. அலங்காரங்கள் அமைந்துள்ள ஆவர்த்தனங்களின் எண்ணிக்கை
1. 5 2. 7 3. 10 4. 12

9. திரியாங்கங்கள்
1. லகு,த்ருதம்,குரு 2. அனுத்ருதம்,ப்லுதம்,காகபாதம் 3. லகு,அனுத்ருதம் , குரு
4. லகு,த்ருதம் ,அனுத்ருதம்

10. தம்புராவில் "கணீர" என்று உண்டாவதற்காக பயன்படுத்தப்படுவது.
1. பிருடை 2. மணிக்காய் 3. ஜீவாளி 4. லங்கா

11.மேலஸ்தாயியின் மறுபெயர்
1. மத்தியஸ்தாயி 2. தாரஸ்தாயி 3. நீஸஸ்தாயி 4 .சமஸ்தாயி

12. அடதாளத்தின் முதல் லகுவை நீக்கினால் வரும் தாளம்
1. மட்டியம் 2. ரூபகம் 3. ஜம்பை 4. திரிபுடை

13. "முருகா.................." எனும் வர்ணம் அமைந்த ராகம்
1. ஆரபி 2. மத்தியமாவதி 3. மோகனம் 4. சுத்தசாவேரி

14. சிறந்த நாதயோகி என அழைக்கப்படுபவர்
1. புரந்தரநாயனார் 2. பாபநாசம்சிவன் 3. முத்துத்தாண்டவர் 4. தியாகராஜர்

15. சிவபெருமானே.............. என்னும் உருப்படியின் வகை.
1. சஞ்சாரிகீதம் 2. கீதம் 3. கிருதி 4. பதம்

16. இந்தியாவின் தேசிய வாத்தியம்
1. தம்புரா 2. வீணை 3. வயலின் 4. கோட்டுவாத்தியம்

17. நித / நிதபம // என்பதற்கு அடுத்து வரும் வரி
1. மப / மபதனி // 2. பத / பதநிஸ // 3. தப / தபமக // 4. பம / பமகரி //

18. தாளக்கட்டுப்பாட்டுக்குள் அடங்கும் உருப்படி
1. அநிபந்தம் 2. வெண்பா 3. விருத்தம் 4. நிபந்தம்



kalvi.lk

19. ஸ்ா ; காமபாதநி ; மொத்த அட்சர எண்ணிக்கை
1. 15 2. 12 3. 14 4. 18
20. உபாங்க ராகமானது
1. ஐந்து ஸ்வரங்களைக் கொண்டது 2. சம்பூர்ண ஸ்வரங்களை உடையது
3. அன்னிய ஸ்வரங்களை கொண்டது 4. ஸ்வக்கீய ஸ்வரங்களை கொண்டது
21. பன்னிரண்டு ஸ்வரஸ்தானங்கள் உருவாவதற்கு காரணமானவை
1. ஒலி 2. பிரக்ருதிபேதம் 3. நாதம் 4. கோமளதீவிரபேதம்
22. தான் அமைந்துள்ள இராகத்தின் இலட்சணத்தை ஸாகித்தியம் மூலம் விளக்கும் உருப்படி
1. சஞ்சாரிகீதம் 2. இலட்சணகீதம் 3. சாமான்யகீதம் 4. வெய்கீதகீதம்
23. மாத்ருகா பதங்கள் காணப்படும் உருப்படி வகை
1. கிருதி 2. கீதம் 3. ஜதீஸ்வரம் 4. ஸ்வரஜதி
24. சாமகாணம் பாடப்பட்ட இராகம்
1. சங்கராபரணம் 2. மாயாமாளவகௌளை 3. கல்யாணி 4. ஹரஹரப்பிரியா
25. துரித லயத்திற்குரிய காலம்
1. விளம்பிதகாலம் 2. 2ம் காலம் 3. மத்திமகாலம் 4. 3ம் காலம்
26. தைவதத்திற்குரிய தமிழிசைப் பெயர்
1. தாரம் 2. இளி 3. உழை 4. விளரி
27. மத்தியஸ்தாயி ஸட்ஜத்தை ஆதார ஸட்ஜமாக கொண்டு பாடுவது
1. பஞ்சமசுருதி 2. மத்திமசுருதி 3. சமசுருதி 4. பஞ்சமமத்திமசுருதி
28. பத்தாவது ஸ்வரஸ்தானம்
1. கைசிகிநிஷாதம் 2. காகலிநிஷாதம் 3. சுத்ததைவதம் 4. சதுஸ்ருதிதைவதம்
29. நாட்டியக் கச்சேரியில் 2வது இடத்தை வகிப்பது.
1. வர்ணம் 2. தில்லானா 3. ஜதீஸ்வரம் 4. கீர்த்தனை
30. வாய்மொழி இலக்கியம் எனப் பெயர் பெற்ற பாடல்கள்
1. தேவாரப்பாடல் 2. திருப்புகழ் 3. நாட்டார் பாடல் 4. பக்திப்பாடல்
31. வாசுதேவநாமாவளி எனும் உருப்படியை இயற்றியவர்
1. பாபநாசம்சிவன் 2. முத்துத்தாண்டவர் 3. புரந்தரதாஸர் 4. சியாமாசாஸ்திரிகள்
32. தாளத்தந்தி என்னும் பாகத்தினை உடைய இசைக்கருவி
1. தம்புரா 2. வயலின் 3. புல்லாங்குழல் 4. வீணை
33. தகதிமி எனும் சொற்கட்டின் நடை
1. திஸ்ரநடை 2. கண்டநடை 3. மிஸ்ரநடை 4. சதுஸ்ரநடை
34. தாளத்தை ஒரே காலப்பிரமானத்திற்கமைய நடத்திச் செல்வது
1. லயம் 2. சுருதி 3. ஸ்வரம் 4. சாகித்தியம்
35. மிககூடிய அட்சர எண்ணிக்கை கொண்டுள்ள தாளம்
1. சங்கீர்ணஅட 2. சங்கீர்ணதுருவம் 3. சங்கீர்ண ஏகம் 4. சுங்கீர்ண மட்டியம

- கீழே தரப்பட்டுள்ள ஸ்வர ஸாகித்தியத்தை அடிப்படையாகக்கொண்டு 36 – 39 வரையான வினாக்களுக்கு விடை தருக.

தஸ / தபமப // ரிம / பதபா //
கண . நா.தா. குணம் நீ. தா

36. மேலே கொடுக்கப்பட்டுள்ள உருப்படி
1. ஜதீஸ்வரம் 2. இலட்சணகீதம் 3. சங்காரிகீதம் 4. அங்காரம்
37. இவ்வுருப்படி அமைந்துள்ள தாளம்
1. சதுஸ்ரஜாதிரூபகம் 2. மிஸ்ரஜாதிரூபகம் 3. கண்டஜாதிரூபகம் 4. திஸ்ரஜாதிரூபகம்
38. இவ்வுருப்படியில் ஓர் ஆவர்த்தனம் எடுக்கும் மொத்த அட்சரம்
1. 7 2. 8 3. 6 4. 4
39. இவ்வுருப்படியை இயற்றியவர்.
1. புரந்தரதாஸர் 2. T.V பிச்சையப்பா 3. திலகநாயகம்போல் 4. முத்துத்தாண்டவர்
40. சந்தங்களை பிரதானமாகக் கொண்டமைந்த உருப்படி
1. தேவாரம் 2. திருவாசகம் 3. திருப்புகழ் 4. புராணம்

$(1 \times 40 = 40$புள்ளிகள்)


kalvi.lk

## பகுதி – II

○ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

I. 1) நாதத்தின் வகைகளைக் குறிப்பிடுக. (2புள்ளி)

2) அப்பியாசகானத்தில் அடங்கும் உருப்படிகள் 4 தருக? (2புள்ளி)

3) ஆயிரக்கணக்கான கீதங்களை இயற்றி "வெயகீத" என்னும் சிறப்புப்பட்டம் பெற்ற வாக்கேயகாரர் யார்? (1புள்ளி)

4) "ராமதாஸ" என்னும் முத்திரையை உடைய வாக்கேயகாரர் யார்? (1புள்ளி)

5) // இக்குறியீடு குறிப்பது? (1புள்ளி)

6) ஆடவர்ணம் எனப்படுவது யாது? (1புள்ளி)

7) திருவாசகம் பாட உகந்த இராகம் யாது? (1புள்ளி)

8) பண் காதாரி, நட்டராகம் என அழைக்கப்படும் இராகம் யாது? (1புள்ளி)

9) 29வது மேள எண்ணைக் கொண்டமைந்த இராகம்? (1புள்ளி)

10) 7தந்திகளை கொண்ட வாத்தியம்? (1புள்ளி)

II. பின்வரும் இராகங்களுள் ஒரு இராகத்திற்கு விரிவான இலட்சணம் எழுதுக.

1) 8வது மேள எண்ணை உடைய இராகம்.

2) பண் இத்தளத்திற்கு ஒப்பான இராகம் (12புள்ளி)

III. 1) பேரின்ப பதங்களை இயற்றிய வாக்கேயகாரர் யார்? (2புள்ளி)

2) இவரது இசைப்பாணி பற்றி விளக்குக. (6புள்ளி)

3) இவர் இயற்றிய உருப்படி 4 தருக. (4புள்ளி)

IV. 1) இந்தியாவின் தேசிய வாத்தியமாகவும், சங்கீதத்தின் அணிகலனாகவும் விளங்கும் வாத்தியம் எது? (1புள்ளி)

2) இவ்வாத்தியத்தில் சுருதி சேர்க்கும் முறையினையும் வாசிக்கும் முறையினையும் விளக்கமாக தருக? (5புள்ளி)

3) இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக. (4புள்ளி)

4) இவ்வாத்தியம் வாசித்துப் பிரபல்யமடைந்தோர் பெயர் இரண்டு தருக? (2புள்ளி)

V. பின்வரும் பதங்களுக்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) சபாகானம் 2) ஸ்வரம் 3) சங்கீதம் 4) அப்பியாசகானம்

(12புள்ளி)

VI. இந்தியாவில் 7ம் 8ம் நூற்றாண்டில் கர்நாடக இசையின் கலாசாரப் பின்னணி பற்றி விளக்கி விபரமாக எழுதுக. (12புள்ளி)

VII. 1) ஜனக இராகத்திற்குரிய சிறப்பியல்புகளைத் தருக. (2புள்ளி)

2) ஜன்னிய இராகப்பிரிவுகளை குறிப்பிடுக. (3புள்ளி)

3) ஜன்னிய இராகப்பிரிவில் 2 இற்கு உதாரணம் தந்து விளக்குக. (7புள்ளி)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page